**Starting time 01.20 P.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.202/2014**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 26.03.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிவேல் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** தாவா சொத்து வீடு என்றால், ஆமாம். அதில் வாதி எந்த பகுதியில் குடியிருக்கிறார் என்றால், தெற்கு பகுதியில் வாடகைக்கு குடியிருக்கிறார். அவர் வாடகைக்கு குடியிருக்கிறார் என்பதற்கு ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா என்றால், இல்லை. தாவா சொத்தை பொறுத்து எனது உடன் பிறந்தவர்களிடமிருந்து பாகப்பாத்திய விடுதலை பத்திரம் பெற்றுள்ளோன என்றால், பெற்றுள்ளேன். அந்த பத்திரத்தின் அடிப்படையில் தான் முழு சொத்தும் எனக்கு உரிமையானது என்று குறிப்பிடுகிறேன் என்றால், ஆமாம். அதற்கு பட்டாவும் இருக்கிறது.

2. இந்த வழக்கு சொத்தின் புல எண். 621/17 என்றால், ஆமாம். அதற்கு பழைய புல எண் 341/1 ஏ 1 என்றால், ஆமாம். 1 ஏ 1 என்பது அந்த கிராமத்திற்கு சம்மந்தப்பட்ட புல எண் என்றால், ஆமாம். என்னுடைய விடுதலை பத்திரத்தில் புல எண். 671/17 என்று குறிபிப்பிடப்பட்டுள்ளது என்றால், அதன் புல எண். 621/17 ஆகும். அதில் பத்தித்தில் குறிப்பிடப்பட்டுள்ள கதவு எண். 5/19 பி என்றால், ஆமாம். அது பழைய கதவு எண்.

அந்தபாகப்பாத்திய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்ணுக்கும் கதவு எண்ணுக்கும் வாதி தாவா தாக்ல செயய்வில்லை என்றால், ஆமாம். எனவே தாவா சொத்திற்கும் நான் விடுதலை வாங்கிய சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால், சரியல்ல.

3. வாதி வாடகைக்கு இருக்கும் வீட்டிற்கு அவர் பெயரில் தான் வீட்டு வரி செலுத்தி வருகிறார் என்றால், எங்களுக்கு தெரியாமலேயே அவரது பெயரில் செலுத்தி விட்டார். பஞ்சாயத்து அலுவலகத்தில் சென்று நான் கேட்ட போது வழக்கில் தீர்ப்பு பெற்ற பிறகு மாற்றி தருவதாக கூறியுள்ளனர். வீட்டு வரி பதிவேட்டில் வாதி பெயரில் தான் பதிவாகியுள்ளது என்றால், சரியல்ல.

4. எனது அப்பா பெயரில் தான் பதிவாகியுள்ளது. பஞ்சாயத்தில் நான் ஆட்சேபனை செய்தது சம்மந்தமாக ஏதேனும் ஆதாரம் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால், இல்லை ஆனால் என்னிடம் உள்ளது. வாதி குடியிருக்கும் வீட்டிற்கு அவரது மனைவி பெயரில் மின் இணைப்பு உள்ளது என்றால், எனக்கு தெரியாமலேயே அவரது பெயரில் வாங்கிவிட்டார்கள்.

5. மின் வாரிய அலுவலகத்தில் சென்று நான் கேட்ட போது வழக்கில் தீர்ப்பு பெற்ற பிறகு மாற்றி தருவதாக கூறியுள்ளனர். வாதி தான் மின்சாரத்தை பயன்படுத்தி மின் கட்டணம் செலுத்தி வருகிறார் என்றால், ஆமாம். நான் என்ன படத்துள்ளேன் என்றால், 12-ஆம் வகுப்பு படித்துள்ளேன். என்னுடைய சொத்து என்று குறிப்பிடப்படும் வீட்டிற்கு பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தில் மின் இணைப்பு எண். 217 என்றால், ஆமாம்.

6. வாதியின் மின் இணைப்பு எண். 1026 என்றால், ஆமாம். நான் என்னுடைய கையெழுத்தை ஆங்கிலத்திலும், தமிழிலும் போடுவேன் என்றால் ஆங்கிலத்தில் தான் போடுவேன். தமிழில் போட மாட்டேன். நான் எங்கு வேலை பார்த்தேன் என்றால், சத்துணவில் வேலை பார்த்தேன். அரசாங்க பணியில் இருப்பதால் நான் தமிழில் தான் கையொப்பம் போடுவேன் என்றாலும், ஆங்கிலத்தில் தான் போடுவேன் என்றாலும்,

சரியல்ல.

7. அந்த வீட்டில் வாதி 25 வருடமாக குடியிருக்கிறார் என்றால், இல்லை குறைவாகத்தான் இருக்கும். வாதி வாடகை கொடுத்ததற்கும் நான் வாடகை வாங்கியதற்கும் ரசீது ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. கிராமத்தில் அவ்வாறான வழக்கம் இல்லை. வாதி குடி வந்ததில் இருந்து எனது பெயரில் அந்த வீட்டிற்கு மின் இணைப்பு ரசீதோ, வீட்டு வரி ரசீதோ இருக்கிறதா என்றால், இல்லை. அவர் குடிவந்த பிறகு ரத்து செய்துவிட்டு அவர் பெயரில் வாங்கி விட்டார்.

8. எனது தகப்பனார் பெயர் பொன்னன் என்றால், ஆமாம். எனது சித்தப்பா பெயர் ராமன் என்றால், ராமு. என் தகப்பனார் பெயரிலும், எனது சித்தப்பா பெயரிலும் தான் வாதி குடியிருக்கும் வீட்டிற்கான பட்டா இருந்தது என்றால், இல்லை, ஆரம்பத்திலிருந்தே எனது தகப்பனார் பெயரில் தான் இருந்தது. 22.03.1999 தேதியன்று எனது தகப்பனாரும், எனது சித்தப்பாவும் வாதியிடமிருந்து ரூ.30 ஆயிரம் பணத்தை வாங்கிகொண்டு அந்த வீட்டை வாதிக்கு கொடுத்துவிட்டார் என்றால், இல்லை, பொய்யான ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளனர்.

9. 26.07.2000 தேதியன்று எனது சித்தப்பாவும் அவருடைய சொத்தையும் வாதியிடமிருந்து ரூ.30000 பெற்றுக்கொண்டு ஒப்படைத்துவிட்டார் என்றால், இல்லை.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 01.37 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**